DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 64/2025 |
| Deposition of witness | : | PW- 1 |
| Name | : | வசீகரன் |
| Father's /Husband Name | : | கலியமூர்த்தி |
| Village | : | கூத்தனூர் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 19 |
| Occupation | : | கல்லூரி மாணவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day May 2025.
Accused A2 present. A1 absent. petition under section 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:-**

எதிரிகளை எனக்கு தெரியும். இவ்வழக்கின் ஆஜர் எதிரிகள் வீடு கண்ணாகுட்டி என்பவரது வயல் அருகே உள்ளது. அந்த வயலிற்கு 29.10.2024 ம் தேதி காலை 07.30 மணிக்கு எனது அண்ணன் சந்தோஷ் கை டிராக்டர் எடுத்துக்கொண்டு உழவு ஓட்டுவதற்காக சென்றார். அப்போது கை டிராக்டர் சேற்றில் மாட்டிக்கொண்டதால் அதை எடுப்பதற்காக நானும் சென்றிருந்தேன். அப்போது எனது அம்மாவை பற்றி 1 வது எதிரி கண்ணன் எத்தனை பேர் வந்தாலும் உங்க அம்மாவுக்கு பத்தாது என்று அசிங்கமாக பேசினார். நான் எனது அம்மா சுந்தரியிடம் சொன்னேன். அன்றைய தினம் காலை 09.30 மணிக்கு நானும் எனது அம்மா சுந்தரி, அண்ணன் சந்தோஷ் ஆகியோருடன் கண்ணன் வீட்டுக்கு சென்று கேட்டோம். அப்போது 1 வது எதிரி கண்ணன் எனது அம்மாவை பற்றி குச்சிக்காரி மவனே, தேவுடியா மவனே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். 1 வது எதிரி என்னை பார்த்து அப்படி தான்டா பேசுவேன் குச்சிக்காரி மவனே, தேவுடியா மவனே, பொட்ட பயலே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். 1 வது எதிரி என்னை அசிங்கமாக திட்டியதில் எனக்கு மிகவும் அசிங்கமாக இருந்தது. 1 வது எதிரி கண்ணன் கட்டையால் எனது அம்மா சுந்தரியை அடிக்க முற்படும்போது நான் தடுத்தேன். அப்போது 1 வது எதிரி அந்த கட்டையால் எனது தலையில் அடித்தார்

அதில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. அதற்கு 7 தையல் போட்டார்கள். 2 வது எதிரி கௌரி கட்டையால் எனது அம்மாவின் முதுகு மற்றும் கழுத்து ஆகிய இடங்களில் அடித்தார் அதில் எனது அம்மாவிற்கு உள்காயம் ஏற்பட்டது. பிறகு எதிரிகள் இருவரும் கட்டையை காண்பித்து கட்டையாலேயே கொன்று விடுவோம் என்று மிரட்டினார். எதிரிகள் மிரட்டியதால் எங்களுக்கு மிகவும் பயமாக இருக்கிறது. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தோம் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். நான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது பேரளம் போலிசார் வந்து விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:-

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.05.22 06:36:01 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 64/2025 |
| Deposition of witness | : | PW- 2 |
| Name | : | சுந்தரி |
| Father's /Husband Name | : | கலியமூர்த்தி |
| Village | : | கூத்தனூர் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 41 |
| Occupation | : | விவசாய வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day May 2025.
Accused A2 present. A1 absent. petition under section 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:-**

எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 எனது மகன். இவ்வழக்கின் ஆஜர் எதிரிகள் வீடு கண்ணாகுட்டி என்பவரது வயல் உள்ளது. அந்த வயலிற்கு 29.10.2024 ம் தேதி காலை 07.30 மணிக்கு எனது மகன் சந்தோஷ் கை டிராக்டர் எடுத்துக்கொண்டு உழவு ஓட்டுவதற்காக சென்றார். அப்போது கை டிராக்டர் சேற்றில் மாட்டிக்கொண்டதால் அதை எடுப்பதற்காக எனது மகன் அ.சா. 1 அங்கு சென்றிருந்தார். அப்போது என்னை பற்றி 1 வது எதிரி கண்ணன் எத்தனை பேர் வந்தாலும் உங்க அம்மாவுக்கு பத்தாது என்று அசிங்கமாக பேசியுள்ளார். அன்றைய தினம் காலை 09.30 மணிக்கு நானும் எனது மகன்கள் வசீகரன் மற்றும் சந்தோஷ் ஆகியோருடன் கண்ணன் வீட்டுக்கு சென்று கேட்டோம். அப்போது 1 வது எதிரி கண்ணன் என்னை குச்சிக்காரி மவனே, தேவுடியா மவனே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். 1 வது எதிரி கண்ணன் கட்டையால் என்னை அடிக்க முற்படும்போது அ.சா.1 தடுத்தார். அப்போது 1 வது எதிரி அந்த கட்டையால் எனது தலையில் அடித்தார் அதில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. 2 வது எதிரி கௌரி கட்டையால் என்னை முதுகு மற்றும் கழுத்து ஆகிய இடங்களில் அடித்தார் அதில் எனக்கு உள்காயம் ஏற்பட்டது. பிறகு எதிரிகள் இருவரும் கட்டையை

காண்பித்து கட்டையாலேயே கொன்று விடுவோம் என்று மிரட்டினார். எதிரிகள் மிரட்டியதால் எங்களுக்கு மிகவும் பயமாக இருக்கிறது. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தோம் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். நான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது பேரளம் போலிசார் வந்து விசாரித்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:-

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.05.22 06:36:13 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 64/2025 |
| Deposition of witness | : | PW- 3 |
| Name | : | **ஜெயகுமார்** |
| Father's /Husband Name | : | **சந்திரசேகரன்** |
| Village | : | **கூத்தனூர்** |
| Taluk | : | **நன்னிலம்** |
| Age | : | 32 |
| Occupation | : | **விவசாய வேலை** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day May 2025.
Accused A2 present. A1 absent. petition under section 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை**:-

தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 30.10.2024 ம் தேதி காலை 09.30 மணிக்கு பேரளம் போலிசார் 3 கூத்தனுர், தெற்கு தெரு, கண்ணன் வீட்டருகே நடந்த சண்டை சம்மந்தமாக வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அப்போது நானும் குறல்வேந்தன் என்பவரும் உடனிருந்தோம். நானும் குறல்வேந்தனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்ப்படுன் என்னுடைய முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:-

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

M S
BHARATHIDHASAN

Digitally signed by
M S
BHARATHIDHASAN
Date: 2025.05.22
06:36:20 +0530